1973 நவம்பர் 19]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கடவுளர் சிலை திருட்டுகளைக் குறித்துப் புலனாய்வு செய்வதற்குக் காவல் துறையில் ஏற்கெனவே தனிப்பிரிவு ஒன்று உள்ளது.

* 150 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் 1970-71-ம் ஆண்டில் கோவில் சிலைகள் திருடியது சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டவர்கள் யார் யார்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவை முன் ஒரு விவர அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, இதுவரையில் சுமார் எத்தனை விக்கிரகங்கள் களவாடப்பட்டிருக்கின்றன? களவாடப்பட்ட விக்கிரகங்கள் அமெரிக்கா போன்ற வெளி நாடுகளில் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அவைகளை மீட்பது குறித்து மத்திய அரசாங்க அதிகாரிகளிடம் விவாதித்தது உண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள், அமெரிக்காவிற்குக் கொண்டுசெல்லப்பட்ட சிலைகளை மீட்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டார்கள். அமெரிக்காவில் ஒரு பெரிய தொழிலதிபர்; கலைப் பொருள்களைச் சேகரிப்பவர்; அவருடைய பெயர் நார்ட்டன் ஸைமன் என்பதாகும். சிவபுரத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்ட நடராசருடைய சிலையொன்று அவரிடத்தில் இருப்பதாகத் தெரிந்து, அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மத்திய அரசுக் கல்வி-சமூகத் துறையை மாநில அரசு கேட்டுக்கொண்டது. அது மாத்திரம் அல்லாமல், இந்த விஷயத்தில் உடனடியாக அமெரிக்க அரசோடு தொடர்புகொண்டு, இதிலே தலையிட்டு அந்தச் சிலையை மீட்டுத் தருமாறு நான் பிரதம மந்திரிக்கு 2–7–1973 அன்று ஒரு கடிதம் எழுதினேன். அதற்குப் பிரதம மந்திரி அவர்கள் 2–8–1973 அன்று பதில் எழுதியனுப்பியுள்ளார். தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று அந்தக் கடிதத்தில் பிரதமர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் கோயில்களில் உள்ள சிலைகள் பெருவாரியாகக் களவாடப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, தஞ்சை மாவட்டத்தில் திருக்குவளையில் உள்ள கோயிலில் எல்லாச்

@ 114-118-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

சிலேகளேயும் ஒன்ருகச் சேர்த்துவைத்துப் பாதுகாப்பதென அரசு ஏற்கெனவே அறிவித்திருந்ததே, அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : அப்படிப்பட்ட சிலேகள் கிடைக்கக் கிடைக்க, அப்படிக் காப்பாற்றப்பட வேண்டிய தொன்மையான சிலேகளே ஒரு கோயிலில் மட்டுமல்லாமல் பல்வேறு பகுதிகளிலே வைத்துப் பாதுகாப்பதற்கான முயற்சிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அமெரிக்காவிலுள்ள நார்ட்டன் ஸைமன் அவர்கள் அந்தச் சிலேயைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமாளுல், பணம் கொடுக்கவேண்டும் என்று கேட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அப்படி ஏதாவது தகவல் நமது அரசுக்கு வந்திருக்கிறதா ? அப்படியிருந்தால், அதன் விவரங்கள் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : அதுபற்றிய தகவல் எதுவும் இப்பொழுது அரசுக்கு வரவில்லே. ஆனல், அமெரிக்கத் தூதருடன் மத்திய அரசு இதுபற்றித் தொடர்பு கொண்டிருக்கிறது.

I.A.S. Officers selected from Tamil Nadu

*151 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state the total number of candidates from this State who have been selected for the Indian Administrative Service during the calendar year 1972 from the open market and promotion quota ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : (1) 1972-ல் ஐ.ஏ.எஸ். பதவிக்குத் தமிழ்நாட்டிலிருந்து பதினேரு பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவர்களுள் தமிழ்நாட்டுக்கு ஆறு அதிகாரிகள் ஒதுக்கப்பட்டனர்.

(2) 1972-ல் பதவி உயர்வுப் பங்களவு மூலமாக ஐ.ஏ.எஸ். பதவிக்கு இம் மாநில அரசு அதிகாரிகள் பணியிலிருந்து பதினன்கு அதிகாரிகள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

திரு. என். டென்னிஸ் : தலேவர் அவர்களே, ரெவின்யூ துறையில் உள்ளவர்களுக்கு மட்டுமல்லாமல் மற்றத் துறைகளில் உள்ளவர்களுக்கும் ஐ.ஏ.எஸ். பதவி உயர்வு கொடுக்க அரசு சிபார்சு செய்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். இவ்வாறு பதவி உயர்வு கொடுக்கும்போது ஸ்ட்ரிக்ட் ஸீனியாரிடி முறை கையாளப்படுகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : அதிலும் 'கோட்டா' க்கள் வழங்கப்படுகின்றன.